மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மக்கள் நலன் சார்ந்திருக்கிற கோரிக்கையை எழுப்பியிருக்கிறார். ஏனென்றால், நம்முடைய தாய்த் தமிழகத்தின் தலைமையாக இருக்கிற சென்னை மாநகரிலே மக்கள் நலன் சார்ந்திருக்கிற திட்டங்களை விரைவாகக் கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டுமென்கிற எண்ணத்தில்தான், இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுடைய அந்தக் கோரிக்கையைத்தான், மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எனினும், இதுகுறித்து, கொள்கைரீதியாகத்தான் முடிவு எடுக்க முடியும் என்பதால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு செல்கிறேன் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 154, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. சத்யா, மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

154—

சார்–பதிவாளர் அலுவலகங்களுக்குக் கட்டடம்

***49707—திருமதி ப. சத்யா:**

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி மற்றும் புதுப்பேட்டையில் உள்ள சார்–பதிவாளர் அலுவலகங்களுக்குக் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, வணிக வரித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி மற்றும் புதுப்பேட்டையில் சார்–பதிவாளர் அலுவலகங்கள், அரசுக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. அந்தக் கட்டடங்களில் முறையாகப் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, சார்–பதிவாளர் அலுவலகங்கள் நல்ல நிலையில் செயல்பாட்டில் உள்ளன. எனவே, பண்ருட்டி மற்றும் புதுப்பேட்டையில்

2020 மார்ச் 21]

சார்–பதிவாளர் அலுவலகங்களுக்கு தற்போது புதிய கட்டடங்கள் கட்ட வேண்டிய நிலை இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. சத்யா அவர்கள்.

திருமதி ப. சத்யா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிரில் நிற்பது எப்பேர்ப்பட்ட எதிரிகளாக இருந்தாலும், எதிர்த்து நின்று சரித்திரம் படைத்த ஒரே பெண், இந்தியாவின் இரும்புப் பெண்மணி, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். ‘எண்ணியதைச் செய்திடல் வேண்டும்’ என்பதைக் கடமை உணர்வோடும், ‘புண்ணியமே புரிதல் வேண்டும்’ என்பதைக் கருணை உணர்வோடும் கொண்டு, நினைத்ததை முடிக்க, நீதிக்குத் தலை வணங்கி நேர்மையாக நடக்கிறது எங்கள் அய்யா எடப்பாடியார் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) எனது பண்ருட்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பண்ருட்டி மற்றும் புதுப்பேட்டையிலுள்ள சார்–பதிவாளர் அலுவலகங்கள் மிகவும் சேதமடைந்துள்ள கட்டடங்களில் இயங்குவதால், எந்த நேரத்திலும் அசாதாரணமான சூழ்நிலை ஏற்படும் நிலை உள்ளது. அதனைத் தவிர்த்திட, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதிய சார்–பதிவாளர் அலுவலகங்களைப் பரிந்துரை செய்து, கட்டித் தருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்ருட்டி சார்–பதிவாளர் அலுவலகத்திற்குப் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள இந்த நிதியாண்டில் ரூ.4 இலட்சமும், புதுப்பேட்டை சார்–பதிவாளர் அலுவலகத்திற்கு ரூ.4 இலட்சத்து 50,000 ரூபாயும் செலவிடப்பட்டு, கட்டடங்கள் நல்ல நிலையில் உள்ளன. எனவே, மேலே குறிப்பிட்ட இரு சார்–பதிவாளர் அலுவலகங்களுக்கும் சொந்தக் கட்டடங்கள் கட்ட வேண்டிய நிலை எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. சத்யா அவர்கள்.

திருமதி ப. சத்யா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கட்டடங்கள் சேதமடைந்துள்ள நிலையில் இருப்பதால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் பரிந்துரை செய்திடுமாறு மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்களைத் திரும்பவும் கேட்டுக்கொள்கிறேன். எனவே, பண்ருட்டி மற்றும் புதுப்பேட்டையிலுள்ள அரசு சார்–பதிவாளர் அலுவலகங்களுக்குப் புதிய கட்டடங்களைக் கட்டித் தர உரிய நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறையின் மூலமாக மீண்டும் ஆய்வு செய்து, அந்தக் கட்டடங்கள் பழுதடைந்த நிலையில் பயன்பாட்டிற்குக் கொண்டுவர முடியாத நிலையில் இருப்பதாக ஆய்விலே கண்டறியப்பட்டால், கண்டிப்பாக மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அய்யா அவர்களிடம் எடுத்துச் சென்று, அதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 155, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

155—

முன்பதிவு மையம்

***52057—திருமதி வி. கஸ்தூரி வாசு:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை மலைப் பகுதிக்கு புதிய பேருந்துகள் இயக்கவும், முன்பதிவு மையம் அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?